## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No. 78/2022

PW1– முத்தமிழ்ச்செல்வி நாள் – 24.02.2025

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 2020 ல் கிரைய ஒப்பந்தம் செய்தேன். அந்த கிரைய ஒப்பந்தத்தை என் வீட்டில் வைத்து தான் எழுதினோம். ராஜீ செட்டியார் தான் ஒப்பந்த பத்திரத்தை தட்டச்சு செய்தார். என் வீட்டில் வைத்துதான் கிரையத் தொகை பேசினோம். அந்த சொத்து ஏற்கனவே ராஜீ செட்டியாருக்கு விற்ற சொத்து தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 பத்திரம் தான் நான் கிரையம் செய்த பத்திரம். அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்ட பத்திரம் தான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் பாக்கி தொகை வரவேண்டியது என்று குறிப்பிடப்படவில்லை. பத்திரம் பதிவு செய்த அன்று ராஜீ செட்டியார் பாக்கி ரூ.4.5 லட்சத்திற்கு வீட்டிற்கு வந்து பத்திரம் எழுதி கொடுத்தார். மதியம் 2 மணிக்கு எழுதிக்கொடுத்தார். என் வீடு நான்குரோட்டில் உள்ளது. பத்திர அலுவலகத்திலிருந்து என் வீட்டிற்கு வர சுமார் 20 நிமிடங்கள் ஆகும். வா.சா.ஆ.2க்கு பிறகு தான் வா.சா.ஆ–1 எழுதப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1–ல் ஏற்கனவே பாக்கி ரூ.4.5 லட்சம் தரவேண்டியுள்ளது என்பது பற்றி எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் சொத்துவிவரத்தில் வடபுறம் என்பது மட்டும் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 அறிவிப்பிலும் சொத்துவிவரத்தில் வடபுறம் என்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7ல் வடபுறம் என்று சேர்க்கப்பட்டது வழக்கு போடுவதற்காக வா.சா.ஆ.1 தயார் செய்யப்பட்ட போது சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பில் வடபுறம் என்ற வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. அறிவிப்புகள் எல்லாம் சரியான முகவரிக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1லும், வா.சா.ஆ–2லும் உள்ள ராஜீ செட்டியாரின் கையெழுத்து வித்தியாசமாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 நாங்களாக தயார் செய்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ–3 வீட்டில் வைத்து எழுதப்பட்டது

தான். வா.சா.ஆ-3ல் முத்தமிழ்ச்செல்விக்கு கிரையம் செய்த வகையில் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3ல் கிரைய தொகை பாக்கி உள்ளதாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 எழுதப்பட்ட முத்திரைத்தாள் கருப்பையா என்பவரிடம் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். அது 2017 ஆம் ஆண்டு முத்திரை உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-3 முத்திரைத்தாள் நான் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் ராஜீ செட்டியார் எழுதிதரவில்லை என்றும், நானாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் எத்தனை நாட்களுக்குள் பணத்தை தரவேண்டும் என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான் ஆனால் 9 மாதத்தில் தருவதாக சொன்னார். ராஜீ செட்டியார் உயிருடன் இருந்தவரை பணத்தை திரும்ப பெறுவதற்காக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ-4 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 பத்திரம் ராஜீ செட்டியார் எழுதிதரவில்லை என்றும் நானாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜீ செட்டியார் உயிருடன் இருக்கும் வரையிலும் அவருக்கு நான் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. வாய்மொழியாக தான்கேட்டேன். ராஜீ செட்டியார் 15.11.2021ல் தான் இறந்தார் என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பு ராஜீ செட்டியார் இறந்து 1 வருடம் கழித்து தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். 18.12.2021ல் போலீசில் புகார் கொடுத்துள்ளேன். ராஜீ செட்டியார் வாரிசுகள் எல்லாருடைய பெயரிலும் புகார் கொடுக்கவில்லை. 07.12.2021ம் தேதி காலை 11 மணிக்கு சசிரேகா, அவரது அப்பாவும் வந்து வீட்டில் தகராறு செய்ததாக புகார் கொடுக்கவில்லை. என்னுடைய முதல் வாக்குமூலத்தில் 07.12.2021ந் தேதி நான் போய் அவர்களிடம் எழுதி கேட்டதாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. ராஜீ செட்டியாரின் மகன் முன்பாகவே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராஜீ செட்டியார் இறந்தபிறகு அவருடைய சொத்துக்கள் பிரிப்பது சம்பந்தமாக அவரது வீட்டில் பிரச்சனை உள்ளது எனக்கு தெரியாது. சுசீலா,

மீனாட்சி ராஜீ செட்டியாரின் மகள்கள். அவர்கள் இருவருக்கு சசிரேகா உடன்பிரச்சனைகள் என்றால் எனக்கு தெரியாது. ராஜீ செட்டியாரின் சொத்துக்கள் பிரித்து கொண்டது பற்றி எனக்கு தெரியாது. சசிரேகாவின் பெயரில் சொத்து எழுதிவைத்தது தெரியும். நான் புகார் கொடுக்கும்போது சொத்து எழுதிவைத்தது எனக்கு தெரியும். நான் புகார் கொடுத்தபோது சசிரேகாவும், அவரது அப்பாவும் காவல்நிலையம் வந்தார்கள். காவல்நிலையம் வந்து ஒப்பந்தங்கள் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. பணம் தருவதாக தான் சொன்னார்கள். காவல்நிலையத்தில் வைத்து பணம் தருவதாக சொன்னார்கள் என்று நான் அறிவிப்பிலும் பிராதிலும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் பணம் தருவதாக காவல்நிலையத்தில் எப்போதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்தம் பொய் என்பதால் தான் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ரூ.4.5 லட்சம் தரவேண்டியது என்றால் சரியல்ல. ராஜீ செட்டியாரின் வாரிசுகளுக்கிடையே உள்ள பிரச்சனையை பயன்படுத்தி சசிரேகா தனியாக இருப்பதால் அவரை நான் மிரட்டி பணம் பறிக்க வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு காலாவதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.